# திறவுகோல்



அட்டைப்பட உதவி:
திரு. பா. ரவிக்குமார்,
பெருவிடைமருதூர்.

2056 / ஐப்பசி
மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# பிறந்த தின வாழ்த்தென

மகளுக்கு மரக்கன்றைப் பரிசளித்தேன்.
பாடங்களிலும் படங்களிலும் மண்ணின்
பெருமைகளை மனப்பாடம் செய்த மகள்
மரக்கன்று நட
வீட்டைச் சுற்றித் தேடுகிறாள்
மண் பரப்பை.
அரையங்குல இடத்தையும்
அறை என நிரப்பி விடும்
அடுக்கக இல்லத்தில்
அனாதையாய்
இறப்பு நாளை எதிர்நோக்கி மூலையில்
கிடக்கிறாள்
வனங்களின் தாய்.

## ஆங்கார மிருகம் அடிபணியாமல்

அதிகாரம் கொண்டு ஓங்காரமிட்டபடி
அன்பை பலியாக்குகிறது.
இல்லறவாசலின் படிகள் எங்கும்
கோபப்பேய்கள் ஆடியபடி
தூபமிடுகின்றன.
இதய ரசனைகளை காவு வாங்கி மூளை
விசாரணைக்குள்
முடங்கிப் போயின
சமாதானச் சின்னங்கள்.
காதலின் பயணத்தில் இணைந்திட்ட
மனங்களுக்குள்
இல்லறப் பூக்கள் பூத்திட்ட பின்னே ஐயச்
செடிகளும்
ஆற்றாமை களைகளும்
முளைத்திடும்போது
நம்பிக்கை இறகால்
நாவின் ரணங்களை
கொஞ்சு மொழியில்
வருடி விடுங்கள் வெட்கம் விட்டு.
வாழ்வின் பாதைகள்
வசந்த மழையில் நனையும்.

## தொட்டிச் செடிகளை

வீடெங்கும் இட்டு நிரப்பி
தினமும் நீர் வார்த்து
குழந்தை என பராமரிக்கிறாள் மகள்.
அழுகையாய் நிற்கையில்
உள்வாங்கி வாடும் பூவாகி நிற்கிறது.
மகிழ்வின் எல்லையில் மேனியெங்கும்
பூக்கவைத்து விரிகின்றன வேர்கள்.
அனுதினமும் அவளின் வாசத்தை நுகர்ந்த
படி எட்டிப் பார்க்கின்றன சாளரத்தை.
வீட்டைத் துறந்து
வேறிடம் புகுந்த மகளைத் தேடி
மணத்தை தூது அனுப்பியபடி காத்துக்
கிடக்கின்றன
வேர் உறைந்து வெறுமையாய்.

## ஆகாயத்தை அளந்திட

எத்தனைக்கையில்
பறத்தலின் நிமித்தம்
பார்வை கூர்மை பெற
வானம் ஏகினேன் பறவையென.
எண்ணங்களே சிறகாயின.
இளமை விரிகிறது வானெங்கும்.
இலக்கின்றித் திரிகிறேன்
பறவைக்குஞ்சென.
என்னை நான் உணராத வரை.

## அலை இசையை மொழிபெயர்க்கும்

கரைக்குள் புதைந்து கிடக்கிறது கடலின்
ராகங்கள்.
சிலை வழியே தினமும் கேட்கும்
அர்ச்சனைக்குள் ஒளிந்து கிடக்கிறது
மனிதனின் பேராசை.
நீர்ப்பரப்பில் வாசப்பாதையில் மலர்கள்
கூட்டும் வளங்களின் நீட்சி. ஆறாம்
அறிவு கொண்டு
ஆராய்வதில் முடிகிறது
அவரவர் திறமை.
இசைக்குறிப்பை வாசித்த பின் மலரின்
உயிர்ப்பில் மழலையாகிறேன்
வாழ்வை மறந்து.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



---

# மாயவலி

## நானுன்

தொட்டாற் சிணுங்கிக் கன்னத்தைச்
செல்லமாய்க் கிள்ளி
வெள்ளமாய்   விளையாடுகிறேன்...
நீயோ என்
தேக்குமர தோள்களை
ஆசையாய்க் கடித்துப்
பற்கள் பதிக்கிறாய் ....
இருவரின் மாய வலிகளிலும்
தத்தித் தவழ்ந்து
கும்மாளம் போடுகிறது
கடலென ஆர்ப்பரிக்கும்
நம் ஆழக்காதல்!

## வாழ்வாங்கு வாழ்

நான் திறந்தவெளியில்
உன் காதலோடு
கிரங்கி அலைகிறேன்
நீயில்லை எனும் வருத்தம்
எதுவும் செய்யவில்லை எனை
நாளுக்கு நாள்
உன்மேலான பைத்தியம்
கட்டுக்கடங்காமல்
முற்றிக்கொண்டே போகிறது
இந்தக் குணப்படுத்த இயலாத
இனிய பிரிய நிலையை
நிறைய பிடித்திருக்கிறது
நீ வாழ்வாங்கு வாழ்
இனிவரும் நாட்களைத்
துயரின்றி நகர்த்த
அதுவே போதுமானது
வேறொன்றும் தேவையில்லை.

## சஞ்சீவி சொல்

நீ வசித்த வீதியில்
நான் இன்னும்
பேரன்புடன் பயணிக்கிறேன்
உன்னைப்போல் பேரழகாய்
யாரையும் காணவில்லை
இன்னும் அங்கு
ஆண்டுகள் பல கடந்தும்

அங்குதான் வாழ்கிறாய்
நிறைய காதலுடன்
தேவதையின் அம்சத்தோடு நீ
உன்னிடம் வழங்காத
சிவப்பு ரோஜா
என் இதயத்துள் வாடாமல்
நறுமணம் வீசி
பூத்திருக்கிறது இன்னும்
என்றாகிலும் ஓர்நாள்
கனிவுடன் நெருங்கி
மாயங்கள் நிகழ்த்தலாம்
என்னிடம் பேசாமல்
காயங்கள் செய்த
உன் சஞ்சீவி ஒற்றைச்சொல்.

## மெல்லினம்

நிலவை விலகிட தீர்மானித்து
விழிகளை மூடுகிறேன்
பேரன்பின் நட்சத்திரங்களால்
இதயம் கிழித்துக்
குருதி உறிஞ்சுகிறாய்
பஞ்சின் மெல்லிய நீ!

## புன்னகை நுரை

கண்டுகொள்ளாமல்
காயமும் செய்கிறாய்
கட்டியணைத்துக் கண்டபடி
நேயமும் நெய்கிறாய்
உன் பேரன்பின் கடலில்
திமிங்கலமாய்
ஆழ முயல்கிறேன்
இதழ்களில் அமுதூட்டி
ஒவ்வொரு அலைகளின்மேலும்
இதமாய் தாலாட்டி
மீண்டும் கரையெங்கும்
உன் புன்னகையால்
நுரைப்பூக்க வியாபிக்கிறாய் !

## முத்தத்தின் தனல்

மேகங்களற்ற வானில்
மினுக்கும் நட்சத்திரங்களை
என் சோகங்கள் மொத்தம்
கண்ணீரால் கரைக்கிறது
கூட்டில் கல்லெறிந்தவனை
விடாமல் துரத்தும்
மலை தேனீக்களென
இதயத்தை நெருங்கி
நியாமற்ற விலகலின்
சாப அஸ்திரங்கள்
வன்மம் தீர்க்கின்றன
இரவின் போர்வையுள்
பார்வையற்ற காகமாய்
ஒளிய முயல்கிறேன்
இறுக அணைத்து
வேம்பொன்றின் நிழலில்
நீயளித்த முத்தத்தின் தனல்
விழிகளின் ஆழத்தில்
எரிமலையை வெடித்து
நிலவின் முகட்டில்
நான் முற்றிலும்
சிதறிச் சின்னாபின்னம் ஆவதை
தூரத்தில் மகிழ்ந்து
மமதையில் இரசிக்கிறது.

## அழுகை நாடகம்

எப்பொழுது உன்னை
நேரில் சந்திக்க வந்தாலும்

சாக்லேட்
முல்லை
ரோஜா
ஜிமிக்கி
வளையல்
மோதிரம்
கீ செயின்
கொலுசு என
ஏதோவொன்றைப்
பரிசாக வாங்கிவந்து
உன்னை ஆச்சர்யத்தில்
அசத்துவது வழக்கம் எனக்கு

வரும் வழி எங்கிலும்
அன்று கடையடைப்பு என்பதால்
எதையுமே வாங்கி வராமல்
வெறுங்கையோடு
வெட்கித் தலைகுணிந்து
உன்முன் நிற்கிறேன்

கேட்டதை வாங்கித்தராவிட்டால்
அங்கேயே விழுந்து
அழுது அடம் செய்யும்
அறியாக் குழந்தையைப்போல
பரிசுப்பொருள் கேட்டுச்
அடித்தும்
சிணுங்கியும்
அழுகை நாடகத்தை
அசத்தலாய் அரங்கேற்றி அடம்பிடித்து
அமர்க்களம் நிகழ்த்தினாய் நீ

குழந்தை அழுகையை நிறுத்த
சரியான வழியின்றித்
தட்டுத்தடுமாறித் தவிக்கையில்
நெற்றிப்பொட்டில் உத்தித்த
நேர்த்தியான யோசனையால்
சட்டென்று அணைத்து

உன் மச்சக் கன்னங்கள் முழுதும்
மளமளவென முத்தங்கள்
மழையென வைத்தேன்

அடுத்த நொடியே
அடாவடி காணாமல் போக
அழுகை நாடகம் அடியோடு மாய
முகமெல்லாம் வெட்கங்கள்
விழியெல்லாம் சொர்க்கங்கள்
தேகமெல்லாம் நளினங்கள்
"காசு கொடுத்து
வாங்கி வருவதென்றால்
எந்தப் பரிசும் வேண்டாம்
நேரத்துக்கு நேரில்
இனி வந்தாலே போதுமென்று"
சிவந்த கன்னத்தைத் தடவி
சிரிப்பின் எரிதழலால்
என் இதயத்தை இதமாய் நீ
விழுங்கிக் கொண்டிருந்ததின்
உள்ளர்த்தம் வெளியர்த்தம்
தெரியாதா எனக்கு?

## ஆச்சர்யம்

புள்ளிகளே
கோலங்களாகும்
நட்சத்திரங்கள் மாதிரி
புன்னகையையே
வண்ண ஓவியமாக்கும்
பேரழகின் ஆச்சர்யம்
நீ!

## பொன்மடி

ஆட்காட்டிக் குருவியைப்போல
காதல்காட்டிச் சிறகடிக்கும்

சரக்கொன்றை உன் வெட்கம்
நாட்காட்டித் தாட்களைப்போல
நாருநாராய் கிழிகிறேன்
உன் பொன்மடியில்
நான்நித்தம்.

## ஒற்றை ரோஜா

"ஒத்த ரோசா"
என்று கிண்டலடிக்கும்
பையன்களைக் கண்டால்
வெறுப்பையே
கொட்டித் தீர்க்கும் நீ
நான் அழைக்கையில் மட்டும்
வெட்கங்களை
வாரி  வழங்குகிறாயே
ஏன்?

—

பொன். தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.



---

# கவிதை இனிமை நிறைந்த வாழ்க்கை

மழையில் மகிழும் மலரும்
மாலை மறையும் கதிரவன் ஒளியும்
தேக்கத்தை குளிரூட்டும்
கார்காலம் பனியும்
காற்றில் சருகும் இலையும்
காலை பொழுதில் நிலவும் மறையும்
குளிரை எதிர்பார்க்கும்
கோடைக்கால வெப்பம்
தவழ்ந்து செல்லும் மேகம்
தவற விடாமல் தொடர்ந்து போகும்
இடம்பெயரும் பறவை கூட்டம்
மின்சாரம் இல்லாத நேரம்
வீட்டின் வாசலில் வீசும் காற்றும்
அண்ணாந்து வானம் பார்க்கும்போது
ஆயிரம்கணக்கான நட்சத்திரம்
தொலைந்து போன
சிறுவயது ஞயாபகங்கள்
எத்தனை இனிமை நிறைந்த வாழ்க்கை
சின்ன சின்ன நிகழ்வையும் ரசித்தால்
என்றும் மகிழ்ச்சி நிறைந்திடும்
நம் வாழ்க்கை!

—

க. பூமணி,
சென்னை.
கைப்பேசி: 7397424296

# கல்லாமல் அறிவெங்கே?)

பாவகை: காவடிச் சிந்து

கல்லாத அறிவெங்கே பாரு - உன்
கல்லாமை அழிக்காதா கூறு? உலகில்
கல்லா ஊரிருந்தால்
கனிய வாழ்வேது
அறிக - துன்பம் - புரிக!

செல்வமின்றி மண்ணுலக மேது - வாழ
செம்மையென வாய்ச்சொல்லு மேது -
புவி
செவியைக் கேட்காது
செல்வம் தாழாது!
அறிக-செல்வம் -பெறுக!

—



வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.

# தெரு விளக்கு

உயரத்தில்
குனிந்திருக்கும்
தெரு விளக்கு
எங்கள் எல்லோருக்கும்
மற்றுமொரு நிலவு

நிமிர்ந்து பார்க்கையில்
குனிந்து பார்க்கும்
அத் தெரு விளக்கு
குழந்தைகள் ஆடும்
ஆட்டங்களை ரசித்து
புன்னகைக்கும்

மழை பெய்த
மறுநாளில்
ஈசல் கூட்டங்கள்
அதன் ஒளியில்
அழகாய்
நீச்சலடிக்கும்

பள்ளியைத் தாண்டி
கொய்யா மரம் தாண்டி
நண்பர்களை அரவணைக்கும்
ஒளிக் குடை

பாட்டிக் கதைகளும்
அம்மாவின் பாட்டுகளும்
உறவுகளின் கிண்டல்களும்
நடந்தேறும் விளக்கொளியில்
அரசனைப் போல
படுத்து ஓய்வெடுப்பார்
தாத்தா

குழம்பு
பலகாரம்
மிளகு ரசம்
ஊறல் போட்ட ஊறுகாய் என
ஒவ்வொரு வீட்டிலிருந்தும்
ஒன்றாக சேரும்

அறுசுவை விருந்தில்
தெருநாய்க்கு
உண்ணும் போதே
வைக்கப்படும் உணவு

கதவுகள் திறந்தே கிடக்கும்
வீட்டின் வாசலில்
தெரு விளக்கொளியில்
உழைத்த களைப்போடு
அசந்து உறங்கும்
அனைத்து அரசர்களுக்கும்
சாமரம் வீசும்
மரக்கிளைகள்

அலைபேசியில்
குனிந்து கிடக்கும்
மக்கள் தலையின் மேல்
இன்னமும் அன்பை வீசுகிறது
தெரு விளக்கு

பாட்டிகளும் தாத்தாக்களும்
வெகு தொலைவில்...
பாட்டிக் கதைகளின்றி
உற்றார் உறவுகளின்றி
கதவுகள் பூட்டப்பட்ட
வீடுகளின் முன்பு
அனாதையாக இருக்கிறது
தெரு விளக்கு...
இல்லை... இல்லை...
அனாதைகளாக மக்கள்!

—



சா.கா. பாரதி ராஜா,
மனை எண்1, ஹரிஹரன் நகர்,
வசந்தம் நகர் (உட்புறம்), திம்மாவரம்,
செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732

# தூரதேசம்

பெரிய வீடு
அழகிய தோட்டம்
முற்றத்தில்
சிட்டுக்குருவிகளின் வருகை கூண்டுக்குள்
காதல் பறவைகள்
வரவேற்பு அறையில்
வண்ண மீன் தொட்டி
தனி அறையில்
வெளிநாட்டு பூனைகள்
வீட்டு காவலுக்கு நாய்கள்
இவைகளுக்கு

நேரம் தவறாமல்
உணவளித்து
உறவாக்கிக் கொள்ளும்
வாழ்வின் எல்லைக்கோட்டை
நெருங்கும் பெற்றோர்கள்
தனிமையில்
இவர்களின் பிள்ளைகள்
எங்கோ
தூர தேசத்தில்

—



பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
கைப்பேசி: 63807 04001

# மயக்கும் மாலை

ஒரு மாலை வேளை வந்தது
உன்னை கண்டிட,

ஒரு நாளும் இங்கு போதாது
உன்னை நினைத்திட..

காற்றில் வீசும் தென்றலாய்
நானும் உன்னை பார்க்கிறேன்,

பூக்கள் கண்ட தேனியாய்
நானும் நிற்கிறேன்..

பூஞ்சோலை காற்றும் வந்தது
என்னை தீண்டிட,

கார்மேகம் வானில் சூழ்ந்தது
என்னை நனைத்திட..

சேற்றில் வீழும் தூரலாய்
நானும் உன்னை சேர்கிறேன்,

நதிகள் கண்ட தோணியாய்
நானும் மிதக்கிறேன்...

ஒரு மாலை வேளை வந்தது
உன்னை கண்டிட..

—

மன்னை ராம்குமார் பாஸ்கரன்,
சென்னை.
+91 900 339 9195



---

# ஒரு குவளை தேநீர்

செம்பில் தேநீர் வாங்கிய காலமது
அப்போதெல்லாம் மூன்று ரூபாய்க்கு
தேநீர் கிடைக்கும்
அப்பா அம்மா
நான் அக்காவென எல்லோருக்கும் போக
மிச்சமுள்ள தேநீரில்
கருப்பன் நாய்க்கும் மிஞ்சும்
பன்னும் ரஸ்கும் ஒரு ருபாய்க்கு
கிடைக்கும்.

நண்பனும் நானும் ஒன்பைடுவில் குடிச்சு
பழகுன நாளது
வாரத்துல ஒருநாள் கண்டிப்பா தேநீர்
கடை மேசையில் நிரம்பிடும்

இப்போதெல்லாம் கிடைப்பதில்லை
கருப்பு கட்டத்தை பதிவு செய்தாலும்
வட்டாவிலும் நிரம்பி குவளையும்
வழியும் நுரை படர்ந்த
தேநீரின் கடந்த காலம்

காதல்வசம்

என் தனிமைக்கு எல்லாம்
காரணம் அவள்
தூரமாக நிற்பதுதான்

கவலையாக உள்ளது
எனது நிழலுக்கும் அவள் நினைவிற்கும்...

ஒரு நாள் பிரிவிற்கு
இத்தனை மௌனம்
எனை ஆழ்த்தியதில்லை....

காதலென்று சொல்லுவிட
மனமும் இதழும் நினைக்க
எல்லாம் அவளென
பறக்கிறது பட்டாம்பூச்சி

## ஒரேயொரு சொல்லால்

வெல்லமுடியுமெனில்
முடியுமென சொல்லிவிடு..!
முடியாத சொல்லுக்குள்
திறமையை ஒருபோதும்
அடைத்துவிடாதே...!
அடைமழையிலும் ஐந்துமில்லி நீரை
சுமக்கத்தானே செய்கிறது நத்தை...

## பரந்து விரிந்த கடல்

ஒரே ஒரு துளியில்
தாகம் தீர்க்கிறது மழை

எச்சமிட அலைந்த காகத்திற்கு
தும்பிக்கையில்
வழிகாட்டுகிறது யானை

காடே மௌனமாக இருக்கும் பொழுது
இருட்டிற்கு செய்தியனுப்புகிறது
ஆந்தையின் அலறல்

## தும்பி பறந்திட

வானம் பெய்கிறது
வண்ணங்களாய்

கைரேகை அழிவதற்குள்
காலத்தினை வாழ்ந்திட நினைக்கிறது
நேற்றும் நாளையும்

ஒரே ஒரு பருக்கையில்
பசியோடு பாசமும் ஊஞ்சலாடுகிறது
தூக்கணாங்குருவி மனங்களுக்கு..!

வயது முதிர்ந்த்தும்
கடந்தகாலம் கவலை
மிதக்கும் படகிற்கு
அசையாத துடுப்புகள் இரண்டு

## விழைகிறேன்

எனது மௌனங்களின் நாவிற்கு
யாரும்
அலுமினியத் தகடு கொண்டு
வழிக்க முயன்றதில்லை
அதனாலோ நான்
வசைபாட முயலவில்லை

## பேசத் தெரியாதவன்

தைரியமற்றவன் என குறைகூறும்
நபர்களுக்கு முன்

எனது மௌனத்தை விழுங்கிய இதழ்கள்
புன்னகைத்து மலர்கின்றன

## சரியான நேரம் பார்த்து

பேசத்தயங்குகிறேன்
துணை வரும் நபரிடம்
வாய்த்திறந்து நலம் நாட மறக்கிறேன்

ஏமாளி
கோமாளி என
கூறிய நபருக்கு முன்
எனது ஆறாம் அறவினை
வாய்திறந்து கூற விழைகிறேன்
மௌனத்தினைப் போர்த்திய
மனதிற்கு



நலமா என கேட்பதற்கு மனம்
வரவில்லை

பாவம் இல்லாத மனங்களை
உடையவர்க்கும்
வழங்காத பாராட்டுகளை
பதுக்கியவர்களும்
கண்டிப்பாக என்னிடம் பேச விழைவர்
அன்று நான் கண்டிப்பாக சொல்லி
நகர்வேன்
நான் பேசுவதற்கு நேரமில்லை என...!

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.

# டிசம்பர் பூக்கள்

உன்னிடம் ஒருமுறை கேட்டேன்
'ஊதா பூ' என்றாய்

உன்னிடம் வேறொரு சமயம் கேட்டேன்
'டிசம்பர் பூ' என்றாய்

ஏன் இந்த மலருக்கு மட்டும்
காலத்தால் ஒன்று
நிறத்தால் ஒன்றென
இரண்டு ஆகுபெயர்கள்?

மெய் என்றால் உடல் மட்டுமா?
உடல் சுமக்கும் உயிரின்
ஆகுபெயரும் தான் இல்லையா?

சரமாகத் தொடுத்து ஜடையில்
டிசம்பர் பூக்களை
சூடுகிறாய் என்றால்
நீ காலத்தைச் சூடுகிறாய்
காலத்தின் நிறம் ஊதா.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி.

# இருந்து கொண்டிருக்கும்

இதன் பொருட்டு
இந்தக் கவிதைக்குப்
பின்னால்
இருந்து கொண்டிருக்கிறேன்.
காலத்திற்கும்
இவ்வொரு
கவிதைக்குப் பின்னால்
இருக்க முடியாது என்னால்
அது சாத்தியமுமில்லை.
நான் இல்லாமல் போனாலும்
இக்கவிதை
உங்களோடு காலத்திற்கும்
இருந்து கொண்டிருக்கும்
எனக்கது போதும்.

## பிரபலம்

இதற்கு முன்
நானவனைக் கண்டதில்லை.
இப்போதுதான்
முதன்முதலாய்
அவனைப் பார்க்கிறேன்.
தானாக முன்வந்து
என்னிடம்
அறிமுகப்படுத்திக் கொள்கிறான்.
என்னைப்
பலமுறை பார்த்திருப்பதாய்ச்
சொல்லி
புளகாங்கிதமடைகிறான்.
அவனைப் பற்றி
ஒரு செய்தியும்
நானறியாத போதிலும்
என்னைப் பற்றி
எனக்கே தெரியாத
பல அறியதகவல்களை
அள்ளித் தருகிறான்.
என்னைப் பிரபலமென்று
பிதற்றுமவன்.
நாலும் தெரிந்த
பிரபலமாய்
முதல் சந்திப்பிலேயே
அவன் எனக்குள்
அடர்த்தியாய் இறங்குகிறான்.

## எதுவும் தெரியாது

என் கோட்டிலிருந்து
நான் விலகவில்லை.
உன் கோடு-
படுத்திருக்கிறதா?
சாய்ந்திருக்கிறதா?
எனக்கு
எதுவும் தெரியாது.
புறமுதுகுக் காட்டி
ஓடுவதில் வல்லவனாக
இருக்கிறாய் நீ.
என்னைத் தீர்மானிக்கிற
உரிமையை
உனக்கு நான் தரவுமில்லை
தரவும் மாட்டேன்.
அதிகார
துஷ்பிரயோகத்தையும்
அவமதிப்பையும்
வரமென அடர்த்தியாய்
வாங்கி வந்திருக்கிறாய்.

## காற்றில்...

என் கையில்

முள்ளிருக்கும் தருணம்
ஊதிப் பெருத்த பலூனொன்று
என்னை நோக்கி
மிதந்து வருகிறது காற்றில்.
என்னிடம் துடைப்பம்
இருக்கும் தருணம்
குவிகிறது குப்பைகள்.
என் மனம்
கவிதைக்கானப் படிமத்திற்கு
உழன்று கொண்டிருந்த நேரம்;
ஒரு சருகும்,
பறவையின் இறகும்
இணையாய்த் தவழ்கிறது
காற்றில்.

—

பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602.
கைப்பேசி : 9443139353.



# யதார்த்தம்

தொலைக்கும் வரை
 தெரிவதில்லை
தொலைத்ததின் அருமை

## ஓசைகள்

ஒளிராத அலைபேசி
ஒலிக்காத தொலைபேசி
விரல்படாத அழைப்பு மணி
தட்டப்படாத கதவு
சத்தமில்லாத வீடு
ஒளித்து வைத்துள்ளது
அளவிடயியலா
மன ஓசை டெசிபல்களை

## புரிதல்

பிரிந்து செல்கிறாய்
புரிந்து கொள்ளாததாலா....
அல்லது
புரிந்து கொண்டதாலா...
என்பது மட்டும்
புரியாமலே இருக்கிறது

## தன்னம்பிக்கை

ஆயிரம் முறை
விழுந்தாலும்
வாழ்க்கையில்
எழுந்து நிற்க
முயல்பவர்களுக்கு
முன்னுதாரணமாக
நிற்கிறது மழலை

## முகங்கள்

மனமுகம் காட்டும் கருவி
கண்டுபிடிப்பு
புற முகங்கள்

ஒன்றில் கூட
ஒத்து போகவில்லை
அகமுகங்கள்
அதிர்ந்து அக்கணமே
அழிக்கச் சொன்னது
கோரமுகத்திலொன்று

## நடுத்தர வர்க்கம்

பறக்க இயலாது
யதார்த்த சூழலில்
மாட்டிக் கொண்டு
மேலேயும் போக முடியாமல்
கீழேயும் இறங்க முடியாமல்
உடையக் காத்திருக்கின்றன
சாமானிய
நடுத்தர வர்க்கத்தினரின்
ஆசைபலூன்கள்

—

பா. சிவகுமார்



ஓவியம்: மா. நிரல்யா,
இரண்டாம் வகுப்பு, சிங்கப்பூர்.

# அன்பு செய் மனமே!

மறுமண பதிவு நிலையத்தில், பதிவு செய்த பிறகு வரும், மூன்றாவது போன் அழைப்பு இது. முதலிரண்டு அழைப்பும், ஏனோ மனது ஏற்கவில்லை. பேச்சில் ஓர் உதாசினமும், அலட்சியமும் இருப்பதாகவேபட்டது, கௌரிக்கு.

தம் மனதை, புரிந்து கொள்பவர் மட்டுமல்ல, தானும் அவரை புரிந்து கொள்ளவும், மட்டுமே நடந்தால், அடுத்த திருமணம் செய்வது என்று.. அவளது முடிவில், குடும்பம் மொத்தமும் ஒப்புக் கொண்டிருந்தது.

அவளுக்கு அப்படி ஒன்றும், ரொம்பவும் வயதாகி விடவில்லை. 28 வயதுதான். 27 வயதில், ஒரு விபத்தில் கணவனை, பறி கொடுத்து விட்டாள். சரியாக பத்து மாதமே அவள், அவனோடு வாழ்ந்திருந்தாள். குடும்பம் மொத்தமும், நிலை குலைந்து போனது. சொல்ல முடியாத வேதனை.. வாழ தொடங்கும் போதே, கை நழுவ துணையை இழந்துவிட்ட பரிதாபம்.

அப்பாதான் உருக்குலைந்து, போனார். தன் ஒரே மகளின் வாழ்வு, இப்படி அநியாயமாக போனதை நினைத்து, உருகி போய் கிடந்தார். அன்றிலிருந்து அவர், நோய் பீடித்து கிடந்தார். கௌரி எத்தனை தேற்றியும், அவரால் நிம்மதி கொள்ள முடியவில்லை. அவளை விட ஒரு வயதே சிறியவனான, மோகனும் தன் சகோதரியின், நிலையை திரும்ப சரி செய்துவிட, வேண்டுமென.. தவித்தான்.

தனக்கொரு நல்லது நடக்கும் போது, தன் சகோதரி, பூவும் பொட்டுமாய் திருமண மேடையில், தனக்கு மனைவியாய் வருபவள் கழுத்தில், மீதி முடிச்சையிட வேண்டுமென, எண்ணத்தில் இருக்கிறான்.
ஆரம்பத்தில் கௌரி சம்மதிக்கவில்லை.

'பத்து மாத வாழ்க்கையை, நினைத்தே வாழ்ந்து முடிப்பேன்' என சொல்லியும், அம்மாவும் மோகனும், அவளை விடுவதாயில்லை. தன் மாமனார் மாமியாரும் கூட, அவளது மறுமணத்திற்கு, மனதார சம்மதம் தெரிவித்தும், அவள் வேண்டாமென, பிடிவாதம் பிடித்துக் கிடந்தாள்.
இறுதியில் மோகனின், பிடிவாதம் மட்டுமே அவளை, சம்மதிக்க வைத்தது.

"இல்லேனா.. நானும் இப்படியே, கிடக்கிறேன் கௌரி.. உன்னை இப்படி பார்த்துக்கொண்டு, நான் நன்றாக வாழ முடியாது.. பரவாயில்லை நமக்கு இதுதான்,,

வாய்ச்சது'னு, நானும் இருந்துட்டு போறேன் விடு" என்ற போதுதான், அவளால் எதுவும் பேசி, மறுக்க முடியாமல் போனது.

"உங்க விருப்பம்" என்று ஒப்புதல் கொடுத்தாள். சில கண்டிசன்களை, சொன்னாள்.

"வர்றவர்.. எனக்கு புடிக்கறதைவிட, முதல்ல உங்களுக்கு புடிக்கனும்.. அவர் கூட நான் பேசி, முடிவெடுக்கனும். முக்கியமா.. அவர் மனைவியை இழந்தவராகவோ, அல்லது விவாகரத்து செஞ்சவராகவோ, இருக்கனும்" என்றாள். அப்போது மோகன் கேட்டான்.

"ஏன் கௌரி உன்னை புடிச்சவர், கல்யாண ஆகாதவரா இருந்தா, வேணாமா..? ஏன் இந்த கட்டளை..? அத மட்டும் கொஞ்சம் விட்டுடேன்.." என்ற போது, கௌரி அவனிடம்,

"இல்லடா மோகன்.. மறுமணம்னு, நாம மாப்பிள்ளை தேடும் போது, எனக்கென்னம்மோ இதுப்போல தேடினா.. பின்னாடி எந்த மன உளைச்சலும், வராது'னு, நினைக்கிறேன்.. அத தாண்டி, நீ சொல்றத போல நடந்தால், அங்க நிறைய குழப்பங்களும், தேவையற்ற பேச்சுகளும், நிச்சயம் வரும்டா.. மனரீதியா.. சில விசியங்களை என்னால மட்டுமல்ல.. என்னை போல பெண்களால, தாங்க முடியாது.. என் கண்டிசனை.. நான் மாற்றுவதாய் இல்லைடா" என்றாள். அதற்கு மேல் மோகன் அவளை அதிகம் கட்டாயப்படுத்தவில்லை. சிலதை அவனே புரிந்துக் கொண்டான்.

இன்று காலை வந்த அழைப்பை, கௌரிதான் எடுத்து, பேசினாள்.

"விளம்பரம் பார்த்தேங்க.. அது விசியமா, பேசனும்.. நீங்க?" என்றது எதிர்முனை குரல்.

'ஒரு வேளை மணமகனாய் இருக்குமோ..?' சந்தேகமாய் கேட்டாள் கௌரி.

"நீங்க..?"

"எனக்குதாங்க பொண்ணு பாக்கறோம்.. நீங்க?" அந்த குரல் கேள்வியோடு, முடித்தபோது.. அவளுக்கு,

'நான்தான் பொண்ணு" எனச்சொல்ல, வெட்கமாய் போனது.

"இருங்க தம்பி கிட்ட பேசுங்க.." என்றபடி,

"மோகன் ந்தா.. பேசு" என்று போனை மோகனிடம், கொடுத்தாள்..

"வரன்தானே.. நீயே பேசறதுதானே..?" என்றபடி போனை வாங்கி,

"அலோ..சொல்லுங்க சார்" என்றான். அடுத்து அவன் பேசியதிலிருந்து, கௌரியால் எதையும், புரிந்து கொள்ள முடியவில்லை. மோகன் அதிகம் பேசவில்லை. எதிர்முனையில்தான், பேச்சு அதிகம் இருந்திருக்கும்.. என கௌரிக்கு தோன்றியது..

"சரிங்க நான் கலந்து பேசிட்டு, உங்களை கூப்பிடறேன்" என சொல்லி போனை, அணைத்தான். பின் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த, அம்மாவையும் கௌரியையும்.. கட்டிலில், படுத்தபடி கிடந்த அப்பாவையும், பார்த்து சென்னான்.

"அம்மா நாம சொன்னா.. கௌரிய பார்க்க வர்றாங்களாம்.. நம்ம பற்றிய தகவல்கள் அவங்களுக்கு புடிச்சிருக்காம். அவரும் வங்கிலதான், வேலை பாக்கறாராம்.. அப்பா இல்லை ஒரே ஒரு தங்கையாம்.. மூனு பேர் தானாம்.. பெருசா சொந்தம்'னு, யாருமில்லையாம்.." அம்மா குறுக்கே பேசினாள்.

"மோகன் நீ சொல்ல சொல்ல, எனக்கு இந்த இடம் புடிக்குதுடா.. பேசி பாருடா.. எனக்கென்னவோ கௌரிக்கு, இதை விட நல்ல இடம், அமையுமான்'னு தெரியலை.. நீங்க என்னங்க சொல்றீங்க..?" தன் கணவனைப் பார்த்து, கேட்டாள்.. அவர் மெல்லிய குரலில் பேசினார்.

"என் பொண்ணு நல்லபடியா வாழனும் உங்களுக்கு.. கௌரிக்கும், புடிச்சா முடிச்சிடலாம்" என்றார். கௌரி தன் தம்பியையே, பார்த்தாள்..பின்,

"சரிடா.. ரொம்ப நேரம் பேசின.. ஆனா நீ ஒன்னும் பேசலை.. அப்படி என்னதான், அவரு பேசினாரு..? சரி நான் அவர்ட்ட பேசனும்'னு நீ சொல்லவேயில்லையே.. உன்கிட்ட கொடுத்ததே.. நீ முதல்ல பேசி, தெரிஞ்சுக்கனும்னுதான்.. ஆனா நீ எதுவுமே பேசலையே.." என்றாள்.

"கௌரி.. இன்னிக்குதானே முத கால்.. பேசலாம்.. நான் ஏன் பேசலைனா.. நான் அதை சொன்னா, இந்த இடமே வேணாம்'னு, சொல்லிடுவ.. அதனால என்னால உடனே பேச முடியலை.." என்றான். குழப்பமாய் அவனை பார்த்தாள் கௌரி.

"என்னடா புதிர் போடுற..?"

"நான் எங்க புதிர் போட்டேன்.. அவருதான்.. சொன்னா.. என்னை திட்டக்கூடாது..

சரியா?" என்றான் மோகன். கௌரிக்கு, சுருக்'கென கோபம் வந்தது.

"புதிர் போடாம சொல்லி தொலைடா.."

"சரி..சரி.. கோபபடாதே.. அவருக்கு இதான் முத கல்யாணமாம்.. ஆனாலும் இப்படித்தான் கல்யாணம், பண்ணிக்கனும்'னு, இருக்காராம்.. இப்படி பேசற ஆளுகிட்ட, நான் என்ன'னு பேசறது.?" மோகன் சொன்னதை கேட்டதும், அம்மா பேசினாள்.

"அதனாலென்னடா.. அவங்கள பொண்ணு பாக்க வரச்சொல்லு.. நாமும் பார்ப்போம்.. புடிச்சா முடிச்சிடுவோமே.."

"அம்மா.. நீ சும்மா இரு.. டே.. மோகன் இந்த இடம் சரியா வராது.. வேணாம்'னு சொல்லிடு.. என்னை போலவோ, இல்ல டைவர்ஸ் ஆன ஆளையோ, பாரு.. எனக்கு கல்யாணம் ஆகாதவனே, வேணாம்டா....இல்லேனா எனக்கு இன்னொரு கல்யாணமே வேணாம்" என்று கோபமாயும், வருத்தமாயிம் பேசினாள், கௌரி.

"கௌரி ஏன் வருத்தபடற..? இன்னொரு விசியமும், சொன்னாரு.. அதையும் கேளு. அதுக்கு சம்மதிச்சாதான்.. இந்த கல்யாணம் நடக்கும்'னு சொல்றார்.." கௌரி, அவனை 'என்ன?' என்பதுபோல பார்த்தாள். அம்மாவும்,

"என்னடா விசியம்? சொல்லுடா.." என்ற போது.. மோகன் மெல்ல சிரித்தபடி, சொன்னான்.

"அம்மா இதை சொன்னா நீயும் தான் ஒப்புக்க மாட்ட.."

"மோகன் புதிரை போடாம சொல்லு.. என்னவாம் அது?" கௌரியே, டென்சனாகி கேட்டாள். மோகன், கண்ணை மூடி திறந்து, மூவரையும் பார்த்து, சொன்னான்.

"அம்மா.. அவருக்கொரு தங்கை இருக்காம் வயசு 24 ஆம். அந்த பொண்ணை, ஏமாத்தி கல்யாண பண்ணிட்டாங்களாம்.. அந்தாளு.. சூதாடி, குடிகார பேர்வழியாம். இதுல கொடுமை வேற.. ஆறுமாசம் மேல, வாழாம வந்திடுச்சாம்.. அந்த பொண்ணு.. டைவர்ஸ் ஆகி ஒரு வருசமாச்சுதாம்.. அதனால அண்ணன்.. தன் தங்கைக்கு, கல்யாணம் பண்ணிட்டுதான், தானும் பண்ணிக்கனும்'னு நினைச்சிருக்காரு.. கௌரியோட விவரத்தை, பார்த்திருக்காரு.. அதனால என்னையும் கேட்டாரு. உங்களுக்கு சம்மதம்னா, இரண்டு கல்யாணத்தையும், திருத்தணியில வச்சுக்கலாம்.. இங்க சென்னையில 'ரிசப்ஷன்' வச்சிக்கலாம்'னு, சொல்றாரு.. இப்ப நாமதான் முடிவை, சொல்லனும்.. அதனாலதான்,

அவர் பேச பேச நான், கேட்டுக்கிட்டிருந்தேன்.." பேச்சை நிறுத்திவிட்டு.. மூவரையும் பார்த்தான் மோகன். கௌரி படபடப்பில் இருந்தாள்.

"என்ன கௌரி.. அமைதியா இருக்க..?" அவன் கேட்டதும், கோபமாய் பேசினாள்.

"என்னடா இது.. என்ன எக்சேன்ஜ் ஸ்கீமா..? அந்த ஆளுதான் அறிவில்லாம பேசினா.. நீ மண்டைய மண்டைய, ஆட்டிட்டிருந்தியா? எனக்கு இதுல துளியும், இஷ்டமில்லை. போனை கொடு.. அந்தாளுக்கிட்ட.. நானே பேசறேன்.. இந்த இடமே வேணாம்.. கொஞ்ச நாள் இதை பத்தி, யாரும் பேச வேணாம்.." என்றாள்.

"இப்ப எதுக்கு நீ, கோபபடற.. நமக்கும் கல்யாணத்தை பத்தி, ஒரு கொள்கை இருப்பதை போல, அவங்களுக்கும் இருக்குமில்லையா..? அதனால அவங்களை, கொற சொல்றத விடு கௌரி.. வேணாம்'னா, வேணாம்'னு, சொல்லிடுவோம்.. இதுக்காக அவங்க கிட்ட, சண்ட போடறது போல பேசறது.. எனக்கு புடிக்கல.. என்னை கேட்டா.. அவர் சொல்றதும், சரியாதான் இருக்கு.. இதுல தப்பு ஒன்னுமில்லை.. நல்லது'னு கூட நினைக்கிறேன்.. நீ சம்மதிச்சா நானும், அந்த பொண்ண கல்யாணம் பண்ண, சம்மதம் தான்.." என்றான். அம்மா பேசினாள்.

"மோகன் என்னடா இப்படி பேசற..? ஒருத்திதான்.. இப்படியானா.. உனக்குமா இதே போல.. பாக்கனும்..?" அம்மா, அழாத குரலில் பேசியதும்..

"அதிலென்னம்மா தப்பு.. நம்ம வீட்டு பொண்ணுக்கு நாம, நல்லது பண்ண நினைக்குறோம்ல.. அதேபோலத்தானே, அந்த பொண்ணுக்கும்.. அவங்க நினைப்பாங்க.. நாமலே வேணாம்னா.. எப்படிம்மா? அது சுயநலமில்லையா..? உண்மையா சொல்றேன். இப்படிபட்ட அண்ணனை, என் மாமாவா.. ஏத்துக்க எனக்கு முழு சம்மதம்.. அக்காவ நல்லா வச்சிப்பாரும்மா.. நாமளும் அந்த பொண்ணை நல்லபடியா, வாழ வச்சி அவங்களுக்கு, ஒன்னும் நாம குறைச்சலில்லை..னு காட்டுவோமே.."

'பேசுவது தன் தம்பிதானா' என்ற ஆச்சர்யம்.. கௌரிக்கு.. அவனையே பார்த்தாள். பின் பேசினாள்.

"மோகன் உண்மையாவே, உனக்கு சம்மதமா..? இல்ல நம்ம அக்கா இப்படியாயிட்டாளே.. அவளுக்கு நல்லது செய்யனும்'னு, மட்டும் நினைச்சி.. இப்படி இந்த முடிவுக்கு வந்தியா..?" என்றாள்.

"இல்லக்கா.. இதுல சுயநலமும்தான், இருக்கு. என் அக்காவுக்கு, வாழ்வு கொடுக்க

கல்யாணமாகாத, ஒருத்தர் முன் வரும்போது, அவரோட கண்டிசனும்.. நியாயமானது தானே.. ? இதுல என்னக்கா தப்பு.. இப்படி நாம, ஒரே உறவுக்குள்ள.. இருந்தா அது நம்மை, இன்னும் பலமாக்கும் இல்லையா..? யாரோ ஒருத்தருக்கு, வாழ்க்கைப்பட்டு.. நாங்க இங்க தினமும், அவஸ்த்தை படறது கஷ்டமில்லையா..?  நீதானே சொன்ன.. ஒரு விடோவா.. இல்ல டைவர்சா ஆன பொண்ணுங்க.. திரும்ப கல்யாணம் பண்ணிக்கும்போது, எத்தனையோ சித்ரவதை, வார்த்தைகள் கேட்டு, தினம் தினம் ரணமாகி, சாகனும்டா.. அதனால திரும்ப கல்யாணமே, வேணாம்'னு நீ சொன்னியேக்கா.. நிச்சயமா.. சொல்றேன்.. நானோ இவரோ, அந்த மாதிரி ஆளா, இருக்க மாட்டோம்ங்கா.. எங்களை நம்பு" என்றான்.

கௌரியால், அதற்கு மேல் தாங்க முடியவில்லை.. அவன் கை பிடித்து, அழுதாள். விம்மலோடு சொன்னாள்.

"உனக்கு புடிச்சதை செய்டா.." என்றாள்.. கௌரியின் அப்பா மோகனை,  அருகே அழைத்தார்.. அவரது கண்களில், நீர் பெருகியது. எதுவும் பேசாது, தன் மகனை இழுத்து, அவனது நெற்றியில, ஒரு முத்தம் வைத்தார். அங்கே சுயநலமில்லாத, சகோதர பாசம்.. பெருகி கிடந்தது.



—

இரவிச்சந்திரன்,
சென்னை.

---

# பிறவி அகவல்

இருபால் சேர்ந்து
இருமனம் இணைந்து,

இருபது விரல்கள்
இணைந்து பிணைந்து,

கலவியில் துளிர்த்து
வியர்வையில் நனைந்து,

ஒருதுளி அணுவில்
மலரும் கருவினை,

முந்நூறுநாள் சுமந்து
பூமியில் விழுந்து,

உதிரம் அருந்தி
மலம்சலம் வந்து,

தாயின் வயிற்றில்
எட்டி உதைத்து,

தந்தையின் நெஞ்சில்
ஏறி மிதித்து,

உறவுகளோடு ஓடி
நடந்து மண் அளைந்து

மழலை மொழிந்து
அறிவு வளர்ந்து,

கல்வியும் கலையும் கற்க,

பள்ளிக்குச் சென்று,

வடிவினன் ஆகி, அறிவினன் ஆகி
ஐந்து வயதாகி வரும் பருவமே!

—

கோ. தனுசன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

---

# வடக்கிருத்தலின் வழித்தோன்றலாய்

எங்கிருந்து வந்தது இந்த அறவழிச்
சமரென்று
எண்ணிய போதெல்லாம் - அவரின்
தியாகத்தைத் தாண்டி
சிந்தனை நகர மறுத்தது
யாரிடம் கற்றிருப்பார் இவ்வழியில்
சமராடவென
எண்ணிய போதெல்லாம் - காந்திய
போதனை என்றே நினைத்ததுண்டு
அது தவறென்று இப்போது
புத்திக்கு தெரிந்ததும் நன்று
வீரமென்றாலும் புறமுதுகிடாதே
மானமென்றால் அடிபணிந்து வாழாதே
இன்னல் காணில் விலகி ஓடாதே
அறவழி நின்றே சமராடு என்றது தமிழறம்
பார்த்தீபனும் பசியை வெறுத்தான்
புரட்சியை புசித்தான்
உடலை உருக்கி சுருக்கி
உயிரில் விடுதலைத் தீயை மூட்டினான்
இப்போது நினைக்கையிலும் அவர்
நெஞ்சுரம்
விண்ணையும் விசும்பிடச் செய்யும்
தமிழரின் மறம்
தமிழரின் பாதுகாப்பு கேடயமாக
த வி புலிகள் படை
போர்க் கோலம் பூண்டனர்
பாரத தேசத்திற்கோ
அதன் வேகம் விவேகம்
புரிந்திருக்க வேண்டும்
தமிழரை காக்கவென
அழையா விருந்தாளியாய்
வந்திறங்கின நாசகாரக் கும்பல்
வந்திருப்பது சாத்தான் படை என
தமிழர் நம்பவில்லை மாறாக
காக்கும் கரமென
நிறைகுட தீபம் ஏந்தி வரவேற்றனர்

த வி புலிகளின் போர்க்கருவிகள்
பறிக்கப்பட்டன
எதிர்க் குழுவுக்கு வழங்கப்பட்டன
யாவுமே தலைகீழாய் நடந்தன
தமிழர் பாதுகாப்பும்
கேள்விக் குறிகளாயின
மண்ணையும் மக்களையும் நேசித்த
மான வீரன் சிந்தித்தான்
சினங் கொண்டான்
இந்திய முகத்திரை கிழிக்க
திடங் கொண்டான்
சமராடத் துணிந்தவனுக்கு தேகமே
போர்க்கருவியென
நெஞ்சுரங் கொண்டான்
அறவழியில் நில் என்றே
தமிழர் வாழ்வியலும்
அகிலத்திற்கு கற்பிக்க ஒருபோதும்
தியாக தீபம்
பின்நிற்கவில்லையே..!
தமிழனின் மரபணு அதன்வழிப்
பட்டதல்லோ
அதன் தொடர்ச்சியாய்
வடக்கிருத்தலின் தத்துவம் உணர்ந்து
ஊணின்றிய
உடலாயுதம் தரித்தான்
எங்கள் தமிழ் மறவன்
புறநானூறு கூறிச் சென்றது
வீரத்தில் சிறு கீறல் வீழ்ந்த போது
வடக்கிருந்தான் சேர மன்னன்
பெருஞ்சேரலாதலன் என்று
தன்மானத்திற்கு இழுக்கு வரின்
அம்மானமே பெரிதென
அவமானத்தைத் துடைக்கவென
கோப்பெரும் சோழன்
வடக்கிருந்தான்
நட்புக்கு முன்னே எதுவும் இல்லை
என்றே
பிசிராந்தையரும்
கபிலரும் வடக்கிருந்தே
வரலாறாகி வாழ்கின்றனர்
நாமும் சொல்லுகின்றோம்
தமிழினத்திற்கு தீராத இன்னல்
சூழ்கையில் அதன்
நிழல் திரை கிழிக்க
அதற்கு முடிவுரை எழுத
தமிழீழ தேசத்து இளவலும்
வடக்கிருந்தான் என்றே..!
அறம் செய்ய விரும்பு எனும்
ஔவையின் வாக்குப் போல்
அறஞ் செய்ய விரும்பிய திலீபம்
புரட்சித் தீயை மூட்டி
தமிழருக்கு புதிய பாதை காட்டி
புத்தொளி தந்தார்
வடக்கிருத்தலின் வழித் தோன்றலாய்
அவ்வறத்தின் தொடர்ச்சியாய்
நீட்சியாய்
எம்முன்னே
உடல் உருக உருக
உயிர் ஒழுகி ஒழுகி
காற்றில் கலந்த ஓசை கேட்டு
கதறிய ஓலம் இன்னும்
கேட்குதல்லோ...!
புதிய இலக்கியம் எழுதுவோம்
தியாக தீபம் எனும்
வடக்கிருத்தல் காவியத்தை
வடிப்போம்
நம் இளைய தலைமுறைக்கும்
கற்பிப்போம்
வடக்கிருந்தார் எங்கள் அண்ணல்
என்றே..!

- ஞாரே

# அவர்களாய்...

கைக்கடிகாரம்
இல்லாமையில்

அலைபேசி
எடுத்து பார்க்காமையில்

அலுவலக பேரூந்து
வருவதற்குள்
சாலை வந்தததை
உறுதிப்படுத்தவதாய்

அதே நேரத்தில்
செல்லும் மாணவிகள்
காத்திருப்பில்

சரியாக நேரத்துக்கு
கடை திறப்பவர்
கடைக்கு வந்துக்கொண்டிருக்கையில்

துல்லிய நேரத்துக்கு
பயணப்படும்
பள்ளி பேரூந்து
எதிர் திசையில் கடக்கையில்

## முன்னரும் பின்னரும்

உடல் வேதனையிலும்
மன வேதனையிலும்

முன்னர் சொல்லப்பட
வேண்டியது
கொஞ்ச நேரத்தில்
சரியாகி விடும்
என உடல் வேதனைக்கும்
கொஞ்ச காலத்தில்
என மன வேதனைக்கும்
உணர்வு ரீதியான
ஆறுதல்

பின்னர் தான்
மருத்துவர் உதவி நாடு என்பதும்
ஒய்வு எடுத்துக்கொள் என்பதும்
உணவில் கவனம் என்பதும்
உடலுக்கும்

காரணம் அறிந்து
செயல்படு என்பதும்
தன்னுடையதோ இரவல்
பெற்றதோ ஆலோசனைகளும்
புத்தி ரீதியான
நம்பிக்கை

## கொஞ்சமேனும்...

வாழ்க்கை பயணத்தில்
செய் தொழிலுக்கான
யோசிப்புக்கும்
செயல் பாட்டுக்கான
நேரமும்

குடும்பத்திற்க்கான
காலமும்

உடல் ஒய்வுக்கான
நேரமும்
அவசியம் தான்

ஆயினும்
'நமக்கே நமக்கான'
விருப்பத்திற்க்கான
நேரமும்
கொஞ்சமேனும்
அவசியம் தேவை

நமக்கு நாமே நம்பிக்கை கொள்ளவும்
நம் செயல் பாட்டுக்கு
'புத்துயிர் அளிக்கவும்

## வெற்றி

வசீகரிக்கும் வார்த்தைகள்
கவிதையின் வெற்றி

திட்டமிட்டபடி
செயலாக்கம்
உழைப்பிற்கு வெற்றி

திறமைக்கு ஏற்ப செய் தொழில்
 தேர்வு புத்தியின் வெற்றி

சொன்ன படி நடந்து கொள்ளல்
நா நயத்திற்க்கு வெற்றி

கஷ்டத்தில் உதவுதல்
மனிதத்தின் வெற்றி...

## மௌனம் பேசியதே

வாடிய முகம்
கலங்கிய கண்கள்
குதிரை வேக இதய துடிப்பு
இவற்றோடு
மௌனம் காத்தால்

அது சொல்கின்ற செய்தி
ரணப்பட்டு விட்டது மனது
என்பதை...

## கண்ணீர்

வேண்டுவன கிடைக்க
மழலையரின் முதல் ஆயுதம்

அன்னியர்களை விரட்டும்
விழியின் இராணுவம்

மனதின் வேதனை
குறைய ஒருவழி

காரியம் சாதிக்க
மகளிரின் கடைசி ஆயுதம்...

## அடையாளங்கள்

வாட்ட சாட்ட உடல்
உடல் ஆரோக்கியம்

நம்பிக்கையான வார்த்தைகள்
மனதின் ஆரோக்கியம்

விரைவான செயல்பாடுகள்
இலக்குகளை அடையும் ஆர்வம்

நிதானமான யோசிப்பு
சரியான முடிவு எடுக்கும் அவசியம்...

## விடியும் வரை காத்திரு

நிறைவேற முடியாமல்

போன பணிகளே

நினைவில் இடம் பெற
தவறிய காரியங்களே

புரியாததால் கவனம்
கொடுக்காத வேலைகளே

புத்தியில் இருந்து
'உறக்க இரவில் மட்டும்
விலகிக்கொண்டு
விடியும் வரை காத்திருங்கள்

ஓய்வுக்குப்பின்
சந்திக்கிறோம்...

## அப்ப எல்லாம்...

எதிர்பார்த்த முடிவுகள்
கிடைக்காத போது

விபரங்கள்
உரிய நேரத்தில்
கிடைக்காமை

முன்னவர்
செய்த தவறால்

உடன் செயலாற்றுபவருக்கு
முக்கியத்துவம் புரியாததால்

கோரப்பட்ட உதவிகள்
கிடைக்காததால்

தொடர்ந்த பின்

தொடர்ச்சிக்கு பின்னும்
சம்பந்தபட்டவரின்
ஒத்துழையாமை

என அடுக்கு அடுக்காய்
காரணங்கள்

ஆனால்
இதற்கு முன்னே
விருப்பு வெறுப்பற்ற
சுய பரிசோதனை
தேவை..

## இல்லை...

முற்றுப்புள்ளி இல்லாமால்
வாக்கியம் இல்லை

சிந்தனை இல்லாமால்
எண்ணங்கள் இல்லை

தீர்மானம் இல்லாமால்
செயல்பாடுகள் இல்லை

தேடல் இல்லாமால்
முன்னேற்றம் இல்லை

## என்ன தான்...

நம் எண்ணமும்
செயலும் சரி
என மனசாட்சி
சொன்னாலும்...

பிறர்
புரியாமையாலோ
பிடிக்காததாலோ
பெரியவன் என அலட்டிக்கொள்ளவோ
இது ஒரு விஷயமா
என்று ஏளனப்படுத்தவோ

எதிர் மறை விமர்சனங்கள்
வைக்கப்படுகையில்

தன்னம்பிக்கை ஆட்டம்
கோபம் தலைக்கு ஏறுதல்
மனதை பிசையும் வருத்தம்
அரங்கு ஏறத்தான் செய்கிறது....

## பல தினசரிகளில்

செய்பணி முடித்து
சோர்வாய்
இல்லம் வந்த பின்னும்
இன்று முடிக்காத பணி
நாளைய பணி
என்ற சிந்தனை

எண்ணத்தை
வேறு பக்கம் திருப்ப
தொலைக்காட்சிக்கு
அழைப்பு

அதிலும் கவனம்
செல்லாமால்
மின்விசிறி நோக்கியும்
அறை மேல்பரப்பின் மீதும்
வெறித்த பார்வை

இதையும் தாண்டி
இன்று நடந்தவற்றில்
உற்று நோக்கியதை
பற்றிய சிந்தனை

இறுதியாய்
நமக்கே நமக்கான
விருப்பங்களோடு
கொஞ்சம் நேரம்

இப்படியாய்
படுத்தபடியே
உறக்கம் வரும் வரை

பல தினசரிகளில்

--

*A. S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



## வானத்தின் கீழ்

சுடர் விடும் சூரியன்
எனக்குள் விதைத்து செல்கிறது
ஒரு நித்திய கனவை...

—

*ச. இராஜ்குமார்,*
திருப்பத்தூர் மாவட்டம்.
கைப்பேசி: 8867933021

# அன்'பூ'

வீதியென்று பாராது
வழியென்று சலிக்காது
படர்ந்து கிடக்கிறது கொடி

சேறென்று பாராது
அழுக்கென்று கோணாது
அப்படர் கொடியில்
மலர்ந்திருக்கின்றன
கொத்தாய் மலர்கள்

யாரென்று பாராது
இரவு பகல் எண்ணாது
ஊரெல்லாம் சூழ்கிறது
மலர் வாசம்

இடம் பொருள் ஏவல்
எப்போதும்
பார்ப்பதேயில்லை
அன்பு!

## காலக்கூண்டு

மணிக்கூடு
மணிக்கூண்டு எது சரி?
கூடு வேறு கூண்டு வேறு என்று
இவர்கள் அறிகிலர்
இன்னும் மணித்தியாலங்களை
கூடு கட்டி வைத்திடலாமா
அல்லது கூண்டுக்குள்
அடைத்திடத்தான் இயலுமோ?
நதி போலும்
கடல் போலும்
பொங்கி
வழிகின்ற
காலப்பிரவாகத்தை
எப்படி கட்டுக்குள் வைக்க

மணிக்கூண்டு
நேரக்கூடாக இருந்திருக்கலாமோ?
காலக்கூடாக மாற்றம்
பெற்றிருக்கலாமோ?
மணி என்பது சிறுதுளி
நேரத்தை மணித்தியாலத்துள் கொண்டு
போய்
புகுத்தியது யார்
மூன்று முட்களும் முடிவின்றி
துடித்து இயங்கி
காலத்தை விசிறி எறிகின்றன
நேரத்தை விண்டு விண்டு
தின்று தீர்க்கின்றன
வட்டமடித்து மீண்டும்
இருந்த இடம் தொட்டுச்
சத்தமிட்டுச் சத்தமிட்டுச்
சங்கெடுத்து ஊதிச்செல்கின்றன

கூண்டுக்குள் அடைத்து
காலத்தை
கணித்திடத்துணிந்தவன்...
கூடு கட்டி
காலத்துக்குக்
கடிவாளம் போட்டவன்....
நேரத்தின் வியூகம்,
காலத்தின் வேகம்
அறியாமல் அந்தோ...
காலமாகிப் போகிறான்!!



—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

# நேசிப்பவர்களிடம்

எப்போதும்
தூரமாகவேயிருக்கிறேன்...
சிறு பிரிவைக் கூட
தாங்க முடியாத இதயம்
என்னுடையது!

எப்படியும்
வாழலாமென நினைக்கும்
மனிதன் வாழும் ,
எப்படியாவது வாழவேண்டுமென,
உழைக்கும் எறும்புகளும் வசிக்கின்றன!

குஞ்சுகளுக்கான
இரையோடு
கூடு திரும்பும் பறவையின்
மனநிலையோடு,
ஒரு நாளாவது வாழ்ந்திடவேண்டும்!

துயரமான நேரங்களில்
காணாமல் போகிறார்கள் நேசித்தவர்கள்,
இன்னும் துயரம்
கூடிக்கொண்டேயிருக்கிறது...
சாரல் மழை பெருமழையாகிறது,
என் வானத்தில்!

—

மு. முபாரக்,
திருச்சி.



# வாழ்க்கைப் பயணம்!

வெற்றியின் இரகசியம்
தோல்வியின் பயிற்சி...
தோல்வியின் பயணம்
வெற்றியின் வாசல்....
வெற்றியும் தோல்வியும்
நாணயத்தின் பக்கங்கள்....
தோல்வி என்பது அவமானம் இல்லை..
வெற்றி என்பது மகுடமும் இல்லை..
எதுவும் இங்கே நிரந்தரமில்லை..!
வாழ்வில் எதனையும்
ஏற்க தயாரானால்
வாழ்க்கை பயணம் எளிதாகும்!?

—

முனைவர் சா. சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.